★ கப்டன், லெப்டினன்ட் உட்பட

# வடக்கே பொருள்களை அனுப்ப லஞ்சம் பெற்ற ஒன்பது இராணுவத்தினரும் நீதிமன்றில் ஆஜர்

அரசினால் வடக்கே அனுப்பத்தடை விதிக்கப்பட்ட பொருள்களை அனுப்புவதற்கு லஞ்சம் வாங்கி அனுமதி வழங்கிய ஒன்பது இராணுவத்தினர் கொழும்பில் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களில் ஒருவர் கப்டன், மற்றொருவர் லெப்டினன்ட் ஆவார்கள். இந்த ஒன்பது பேர் மீதும் லஞ்சக் குற்றச்சாட்டுச் சட்டத்தின் கீழும் இராணுவச் சட்ட மீறல் தொடர்பாகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்களில் பலர் இராணுவ பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்கள். வடக்கே உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்லும் லொறிகள் வாகனங்களை இவர்களே சோதனையிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தடைசெய்யப்பட்ட டோச் பற்றறி, எரிபொருள், சில குறிப்பிட்ட பொருள்கள் என்பனவற்றை வடக்கே செல்ல அனுமதித்ததாக விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது. இந்த ஒன்பது இராணுவத்தினரும் பொருள்களைக்கொண்டு சென்ற வர்த்தகர்களிடமிருந்து

— 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 5 - 00

# முரசொலி

முரசு 05 ஒலி 256 பிரசோற்பத்தி ஆடி 26. ( 11 - 08 - 1991 ) ஞாயிறு

# பரந்தன் பகுதியை நோக்கி முன்னேற படையினர் முயற்சி

## நேற்றுக் காலைமுதல் மாலைவரை யுத்தம்

ஆனையிறவு முகாம் பகுதியிலிருந்து இராணுவத்தின் ஒரு அணியினர் குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதல் மத்தியில் பரந்தன் பகுதியை நோக்கி நேற்று முன்னேற முயன்ற போது படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டதாக யுத்த முனைச் செய்திகள் கூறுகின்றன. இதில் படையினர் தரப்பில் சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விமானங்கள் இப்பகுதியில் மாறி மாறித்தாக்குதல்களை மேற்கொண்டன. ஷெல் வீச்சுக்களும் இடம் பெற்றன.

நேற்று முன்தினமும் இப்பகுதியில் ஒரே வெடிச் சத்தங்களும் குண்டு வீச்சு சத்தங்களும் கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனையிறவுக்கு தெற்கே கடும் சண்டை நடைபெறுவதாக பாதுகாப்பு அமைச்சும் ஒப்புக்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 01

## ஆனையிறவு முகாம் பகுதியில் விமானங்கள் கடும் தாக்குதல்

நேற்றுக்காலை 7.30 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாம் பகுதிகளில் மூன்று பொம்மர் குண்டு வீச்சு விமானங்கள், ஒரு அவ்ரோ, ஒரு வை -12 ரக விமானம் உட்பட இரண்டு ஹெலிக்கொப்டர்கள் அகோரத் தாக்குதல்களை நண்பகல் 12 மணிவரை நடாத்தின.

தொடர்ச்சியாக நடாத்தப்பட்ட இக் குண்டுத் தாக்குதல்களினால் உப்பளம் மற்றும் உமையாள்புரம் பகுதிகள் அதிர்ந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஹெலிக்கொப்டர்கள் கலிபர்த் தாக்குதல்களையும், கிரனைட் தாக்குதல்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகிறது. (6,01)

## ஆனையிறவு மோதலில் பதினொரு படையினர் பலி

ஆனையிறவு பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதலின் போது பதினொரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் ஐம்பது சிப்பாய்கள் படுகாயமடைந்ததாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

ஆனையிறவு பகுதியில் தொடர்ந்தும் சண்டைகள் இடம் பெற்று வருவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஆழியவளை சம்பவத்தால் மக்கள் இடம்பெயர்வு

ஆழியவளை, உடுத்துறை இராமங்களில் கடந்த வியாழன் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததையடுத்து செம்பியன் பற்று பகுதியில் தங்கியிருந்த அகதிகள் பருத்தித்துறைப் பகுதியை நோக்கி வர முயன்றதாகத்தெரிவிக்கப்படுகிறது.

செம்பியன்பற்று பகுதிக்கு படையினர் வருவதாக வதந்தி பரவியதையடுத்தே இவர்கள் நாகர் கோயில், அம்பன், கற்கோவளம் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. 24, 06

## வடபகுதி பல்கலைக்கழக கல்லூரி டிசம்பரில் வவுனியாவில் ஆரம்பம்

வவுனியாவில் நிறுவப்பட்டுள்ள பல்கலைக்கழக கல்லூரி எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதி பணித்துள்ளார்.

1987ஆம், 88ஆம், 89ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் சித்தியடைந்த வடபகுதி மாணவர்களே இதற்கு விண்ணப்பிக்கமுடியும் என கொழும்புச்செய்திகள் தெரிவிக்கின்றன.

இங்கு 75வீதம் வடமாகாண மாணவர்களுக்கும், மிகுதி 25வீதம் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குமென ஒதுக்கப்பட்டுள்ளது.

ஐந்து துறைகளில் முதன்முறையாக டிப்புளோமா மற்றும் பட்டங்கள் கற்கைநெறி முடிவில் வழங்கப்படவுள்ளன ஆங்கிலத்தில் டிப்புளோமா

— 04 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் பல்கலைக்கழக புதிய உபவேந்தர் யார்?

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக உபவேந்தரின் பதவிக் காலம் இம்மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைவதால் புதியவர் நியமனம் விரைவில் நடைபெறும் என பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இப் பதவிகளுக்கு யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து அ. துரைராஜா (துணைவேந்தர்)

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கேரதீவு பஸ் சேவை இன்று முதல் ஆரம்பம்

மூத்திரைச்சந்தி- கேரதீவு கொழும்புப் பயணிகளுக்கான பஸ் சேவை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை சங்குப்பிட்டி வவுனியா பஸ் சேவையும் இன்று முதல் ஆரம்பிக்கப்பட

— 04 ஆம் பக்கம் பார்க்க

## இருபதினாயிரம் பேருக்கு விசேட இராணுவப்பயிற்சி

ஆனையிறவு பகுதி யுத்தத்தையடுத்து இராணுவத்தில் மேலும் இருபதினாயிரம் பேரைச்சேர்த்து விசேட பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இவர்களில் முஸ்லிம் இளைஞர்கள் இம்முறை அதிகமாக

— 04 ஆம் பக்கம்பார்க்க

## கிளிநொச்சி நோக்கி இரவு நேரம் ஷெல் தாக்கு

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சிப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நாடாத்தப்பட்டது.

ஷெல் குண்டுகள் கணேசபுரம் பகுதியில் விழுந்து வெடித்ததாகத்தெரிவிக்கப்படுகிறது.

சேதவிவரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேநேரம் நேற்று நண்பகல் வரை ஹெலிகப்டர்கள், விமானங்கள் கரடிப் போக்கு பரந்தன் பகுதியை வட்டமிட்டவண்ணம் இருந்தன. 06

## 10 ஆம் கட்ட நிவாரணம் ஆரம்பிக்கப்படவில்லை

யாழ்மாவட்டத்தில் இரு கட்டங்களாக இம்மாதம் 3ஆம் திகதிமுதல் 9 ஆம்திகதி வரை ஒருகட்டமாகவும் 9ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை அடுத்தகட்டமாக உலர் உணவு வழங்கப்படுமென அறிவித்திருந்தும் இதுவரையில் பல கூட்டுறவுச் சங்கங்கள் அதனை வழங்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதால் உணவுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் பொதுமக்கள் பெரும்கஷ்ட நிலைக்கு

—04 ஆம் பக்கம் பார்க்க

## மீண்டும் ஆலய மணிஓசை; எனினும் பகலில் மட்டுமே!

தம்பலகாமத்தில் தடைப்பட்டிருந்த ஆதிகோணநாயகர் கோயில் மணி ஓசை மீண்டும் பகல் வேளையில் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

இம் மணியோசை எச்சரிக்கை செய்யும் சமிக்கை சத்தமாகஇருக்குமோஎன சந்தேகித்தஇராணுவத்தினர் ஆலய நிருவாகிகளை மணி அடிக்க வேண்டாமென சிறிது காலம் தடுத்து வைத்திருந்தனராம்.

இறை தொண்டுக்குக் அழைப்பதற்காகவே மணி அடிக்கப்படுகின்றது என விளக்கமளிககப்பட்டதன் பின்னர் பகலில் மட்டும் கோயில் மணி ஓசையை எழுப்ப தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழக அனுமதிக்கு - இனி இருதடவை மட்டுமே சந்தர்ப்பம்!

பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப்பரீட்சையில் இனி இருதடவைகள் மட்டுமே சந்தர்ப்பம் வழங்கப்படுமென பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தற்பொழுது பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கு க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் மூன்று தடவைகள் தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்பட்டு வருகின்றது.

1991 - 92 ஆம் கல்வியாண்டுக்கு இப்புதிய நடைமுறையின் அடிப்படையிலேயே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படவுள்ளது. (01)

## பெரும்பாக உத்தியோகத்தர்பதவி விண்ணப்பம் ஏற்கப்படுகின்றது

வடக்கு கிழக்கு மாகாண சமநலசேவைத் திணைக்களத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் வகுப்பு -II வெற்றிடங்களுக்கு ஆட்சேர்க்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி அல்லது சாதாரண தரப்பரீட்சை சித்தியுடன் பேராதனை, வவுனியா விவசாயக் கல்லூரியில் டிப்ளோமா பட்டத்தில் முதல் அல்லது இரண்டாம் தரச் சித்தி பெற்ற 35 வயதுக்கு மேற்படாதோர் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி வடக்கு கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் தொடர்ந்து 5 வருடங்களாவது வசிப்பவராக இருத்தல் வேண்டும். மாதிரிப் படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் இம்மாதம் 19-ம் திகதிக்கு முன்னர் இல 77, அருணகிரி வீதி, திருமலையிலுள்ள சமநல சேவைத்திணைக்கள பிரதிச் செயலருக்கு அனுப்பப்பட வேண்டும்.

அடிப்படைத் தகுதியையுடைய விண்ணப்பதாரிகள் பின்னர் நடைபெறவுள்ள கட்டுரை, பொது அறிவு உள்ளிட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

## மீண்டும் பறக்கும்தட்டு மர்மம் பின்லாந்து வாவியில் தரையிறங்கியதாம்

பின்லாந்து தலைநகர் ஹெல்சிங்கின் வாவி ஒன்றினுள் பறக்கும் தட்டு ஒன்று தரையிறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் நவீன கருவிகளின் உதவி கொண்டு வாவியினுள் தேடப்பட்ட போதிலும் இப்பறக்கும் தட்டு தட்டுப்படவில்லை வாவியின் அடிமணலினுள் இப்பறக்கும் தட்டு புதைந்திருக்கலாம் எனத் தற்போது சந்தேகிக்கப்படுகிறது.

தற்போது இந்த வாவி பொதுமக்களின் பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளதாம்.

### 10 ம் கட்ட நிவாரணம்

வடமராட்சி கிழக்கில் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு 10 ஆம் கட்ட உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. 24

## கொழும்புத் தொடர்பு இல்லை; வங்கிச்செயற்பாடுகள் பாதிப்பு

வங்கிகளில் காசோலை வைப்புகள் ஏற்றுக்கொள்ளப்படாததினால் யாழ் வர்த்தக நிலையங்களின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக இலங்கை வங்கி பிராந்திய முகாமையாளருடன் தொடர்பு கொண்டபோது ஏற்கனவே கொழும்புக்கு அனுப்பப்பட்ட காசோலைகளுக்கான ஆலோசனைகள் தமக்கு இதுவரை கிடைக்காததாலும், கொழும்புக்கு காசோலைகளை அனுப்ப முடியாது இருப்பதாலும் இது தொடர்பாகத் தாம் எதுவும் செய்ய முடியாதிருப்பதாகவும் தெரிவித்தார்.

வெளிநாட்டுக் காசோலைகளுக்கான புதிய நாணய மாற்று வீதங்கள் கிடைக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். 03

## 3கோடி 20 லட்சம் பெறுமதியான உதவிகள் 5250 கிளி.விவசாயிகளுக்கு பகிரப்படும்!

கிளிநொச்சி மாவட்டத்தில் கெயர் நிறுவனத்தால் விவசாய உதவித்திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

5250 விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ள இவ்வுதவிகள் நெற் செய்கைக்கும் உப உணவுப் பயிர்ச் செய்கைக்கும் வழங்கப் படவுள்ளன. நெற்செய்கைக்கென விதை நெல், உரம் என்பனவும், உப உணவுச் செய்கைக்கு விதை, உரம், மண்ணெண்ணெய், விவசாயக் கருவிகள் என்பனவும் வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சி அபிவிருத்தி புனர் வாழ்வுக் கழகம், பூநகரி அபிவிருத்தி புனர் வாழ்வுக் கழகம், கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சி மனித முன்னேற்றச் சங்கம், தென்னிந்தியத் திருச்சபை என்பன மூலம் நடைமுறைப் படுத்தப்படவுள்ள இத்திட்டத்திற்கு மூன்று கோடி 19 லட்சத்து 25 ஆயிரத்து 875 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ள இத்திட்டத்தில் ஒருவர் 2 ஏக்கரில் நெற் செய்கையும், அரை ஏக்கரில் உப உணவுச் செய்கையும் செய்ய வேண்டும்.

திட்ட உதவிப் பெறுமதியில் கால் பங்கை உற்பத்திப் பொருளாக மேற்படி நிறுவனங்களுக்கு வழங்க வேண்டுமென்றும் அதன் மூலம்பெறப்படும் நிதி நிறுவனங்களின் சுழற்சி நிதியாகப் பயன்படுத்தப் படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. 04;05

## 67 ஆயிரம் பேர் விண்ணப்பம்; 31-ல் ஆங்கில ஆசிரியர் தெரிவுப்பரீட்சை

ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நாடு முழுவதிலுமிருந்து 67 ஆயிரம்பேர் விண்ணப்பித்துள்ளனர்.

ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப்பரீட்சை இம்மாதம் 31ஆம் திகதி யாழ்ப்பாணம் உட்பட சகல பகுதிகளிலும் நடைபெறவுள்ளமை தெரிந்ததே.

போட்டிப் பரீட்சையில் குறிப்பிட்ட புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்கள் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

இவர்கள் குறுகிய கால சேவை முன் பயிற்சியின் பின் ஆங்கில உதவி ஆசிரியர்களாகப் பாடசாலைகளில் நியமிக்கப்படுவர்.

## மட்டுநகரில் விதைத்த நெல்லை பராமரிக்க முடியா நிலை

மட்டக்களப்பில் இவ்வருடம் காலபோக நெற்செய்கை8950 ஹெக்டேயரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது விவசாயப் பகுதி 12000 ஹெக்டேயர் நிலப்பரப்பினை இலக்காகக் கொண்டிருந்தது.

எனினும் கடந்த ஒன்றரை மாதமாக மட்டு. மாவட்ட வயற்பிரதேசங்களில் நிலவிய பதற்றம் காரணமாக பெரும்பாலான விவசாயிகள் விதைத்த போதிலும் வயலுக்குச்செல்லஅஞ்சுகிறார்கள்

இதனால் பசளைபோடுதல், நீர்பாய்ச்சுதல், கிருமிநாசினி தெளித்தல் போன்ற பணிகளை விவசாயிகள் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (16)

## மாட்டுப்பண்ணை அபிவிருத்திக்கு இந்தியா உதவி வழங்கும்

இலங்கையின் மாட்டுப் பண்ணை அபிவிருத்திக்கு இந்தியா உதவி வழங்கவுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தமொன்று நேற்று முன்தினம் புதுடில்லியில் கைச்சாத்திடப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் பாற்பண்ணைத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான உபகரணங்களையும், நிபுணத்துவ உதவியையும் இந்தியாவழங்கும்

இதற்குத் தேவையான நிதி உதவியைஉலகவங்கிவழங்கும்.

### ● போர்த்துளி

தம்பி:

அம்மாவை அரவணைக்க  
எனக்கும் ஆசைதான்

அரவணைக்கும் ஆசையில்  
ஆயுதத்தை விட்டால்

அம்மாவும் இல்லை  
நீயும் இல்லை

ஆதலினால்  
ஆயுதத்தை அரவணைக்கிறேன்

— செழியன்


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பட்டமளிப்புச் சான்றிதழ் பெறுதல்

06-07-91 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு வைபவ சான்றிதழைப் பெறத்தவறிய பட்டதாரிகள் உடனடியாக அவற்றை யாழ் பல்கலைக்கழகத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். அல்லது அவருக்குரியவர் தகுந்த அத்தாட்சிக் கடிதத்துடன் பெற்றுக் கொள்ளவும்.

பதிவாளர்.

08059.


## விமானப் பயணி கைது!

நேற்று முன்தினம் 25 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருளைக் கடத்தி வந்த இளைஞர் ஒருவர் கட்டுநாயக்காவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் சென்னையிலிருந்து இவற்றைக் கடத்திவந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## புதிய அதிபராக பிரேமராசா

சுன்னாகத்தில் அமைந்துள்ள கிறிஸ்தவ இறையியற் கல்லூரியின் புதிய அதிபராக வண. ரி. எஸ். பிரேமராசா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு தென்னிந்திய திருச்சபையின் சபைக் குருவாக இவர் இதுவரை பணியாற்றினார். (18)


### சிறுவிளம்பரம்

கல்வி

G. C E. (O/L) கட்டாய பாடமாகியகணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 24 வருட அநுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலத்திற்குள் விசேடசித்திக்குக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரிகிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. 08058

தேவை

பார்மஸி அனுபவமுள்ள பெண் ஊழியர் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். நாதன் ஆங்கில மருந்துச் சாலை நல்லூர், மார்க்கட், கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 08060



## அந்தியேட்டி அழைப்பு



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 27 | 09 |
| 11 | 07 |
| 1932 | 1991 |

அமரர் பொன். கணேசன் B A. (Dip in Ed.)

(இளைப்பாறிய கோட்டக்கல்வி திட்டமிடல் அதிகாரி)

12-08-1991 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருக்கும் அந்தியேட்டிக்கிரியையும் சபிண்டீகரணக் கிரியையும் காலை 8மணிக்கு நடைபெற இருப்பதால் இக்கிரியைகளுக்கு உற்றார். உறவினர், நண்பர்கள் யாவரும் சமுகந்தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய உணவிலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குடும்பத்தினர்

தகவல்: த. ரவீந்திரன்

''மாணிக்கவாசா''  
கரவெட்டி மத்தி,  
கரவெட்டி

08063

## தாண்டிக்குளத்தைத் தாண்டி
## 200 பேர் கொழும்பு பயணம்

கடந்த ஒருமாத இடைவெளியின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை வடபகுதியிலிருந்து சுமார் 200 பேர் தாண்டிக்குளம் வழியாக வவுனியாவை சென்றடைந்ததாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்கள் பின்னர் கொழும்பை நோக்கி பயணத்தைத் தொடர்ந்தனர்.

அடுத்தடுத்த தினங்களில் பெருமளவானோர் வடபகுதியிலிருந்து தாண்டிக்குளம் வழியாக 'வவுனியாவைச் சென்றடைவர் என எதிர்பார்க்கப் படுகின்றது.

## ஆடிப்பூர தினம்

12 ஆம் திகதி திங்கட்கிழமை ஆடிப்பூரத் தினத்தன்று பகல் 10 மணிக்கு யாழ் அருள்மிகு இலங்கை நாயகி அம்மன் ஆலயத்தில் அம்பாளுக்கு ஸ்நபன அபிஷேகமும், பூரகர்மமும் நடைபெற்று 12 மணிக்கு விஷேச பூஜையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சாதாரண பரீட்சை வினாத்தாள்
## புதிய விதத்தில் தயாராகும்

க.பொ.த. சாதாரண பரீட்சை வினாத்தாள் இவ்வருடத்திலிருந்து புதுவிதமாகத் தயாரிக்கப்படவுள்ளது.

இது இரண்டு பிரிவுகளைக் கொண்டதாக அமைக்கப்படும்.

பகுதி (I) பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாக அமையும்.

பகுதி (II) கட்டமைப்பு, உபகட்டமைப்பு வினாக்களைக் கொண்டதாக அமையும்.

ஆயினும் 1990 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு 1991,92 ஆண்டுகளின் பரீட்சைகளிலும், பழைய முறைப்படி தயாரிக்கப்பட்ட வினாத்தாள்கள் வழங்கப்படும் என பரீட்சைத்திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (08)

## 'கெல்ற்' பயிற்சி இங்கு நிறுத்தம்!
## விரிவுரைகளை மட்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

1990—91 கல்வியாண்டுக்கு யாழ் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு 'கெல்ற்' ஆங்கில பயிற்சி வகுப்பு நடாத்தப்பட மாட்டாதுஎன அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்களுக்கு 'கெல்ற்' பயிற்சியின்றியே விரிவுரைகளை ஆரம்பிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கேற்ப மருத்துவ பீட மாணவர்களுக்கு செப்டம்பர் மாதம் 30ஆம் திகதியும், பௌதிகவியல் மற்றும் கலைப்பீட மாணவர்களுக்கு நவம்பர் மாதம் 4ஆம் திகதியும், உயிரியல் விஞ்ஞானம் மற்றும் விவசாயபீட மாணவர்களுக்கு டிசம்பர் மாதம் 4ஆம் திகதியும் விரிவுரைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்புதிய மாணவர்களுக்கு பல்கலைக்கழக மட்டத்தில் ஆங்கில ஆரம்பப்பயிற்சி வழங்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆ துரைராஜா தெரிவித்தார்.

பௌதிக விஞ்ஞானத்துறை மாணவர்களுக்கு இம் முறை முதற் தடவையாக கம்பியூட்டர்த் துறையில் அறிமுகப் பயிற்சியும் வழங்கப்படவுள்ளது.

1990—91 கல்வியாண்டுக்கு தெரிவு செய்யப்பட்ட

ஏனைய பல்கலைக்கழக மாணவர்களுக்கு கடந்த யூன் மாதம் 17ஆம் திகதி முதல் 'கெல்ற்' பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றமையும், இப்பயிற்சி இங்கு நடாத்தப்படாததினால் பயிற்சியுடன், அதற்கான கொடுப்பனவும் யாழ் மாணவர்களுக்கு கிடைக்காமல் போகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (01)

## முல்லை நோக்கி 120 குடும்பங்கள்

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு இராணுவ நடவடிக்கை காரணமாக அப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 120 குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் இரணப்பாலை, வில்வமடு ஆகிய பகுதிகளில் தங்கியுள்ளனர். (24)

## விசாரணை இன்றி $2\frac{1}{2}$ லட்சம் வழக்கு
## விசாரிக்க விசேட திட்டம்

நாடெங்கும் உள்ள நீதிமன்றங்களில் 2, 37, 000 வழக்குகள் விசாரணை செய்யப்படாமல் தேங்கியுள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

இவற்றை விசாரணை செய்து முடிக்கச் சிறந்த நீதிமன்ற வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்காக வடக்குக் கிழக்குத் தவிர்ந்த 207 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இணக்கசபைகள் நிறுவப்படவுள்ளன. (06)

## அனுமதிக்கான ஆரம்ப புள்ளி
## இருநூறாக அதிகரிப்பு!

பல்கலைக்கழக அனுமதிக்கான ஆரம்பத்தகுதி புள்ளி 200 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது பல்கலைக்கழக அனுமதிக்கு 180 புள்ளியே ஆரம்ப தகுதியாகக் கருதப்படுகின்றது.

1991—92 ஆம் கல்வியாண்டு அனுமதியிலிருந்துஇந் நடைமுறை பின்பற்றப்படும்.

சமீபகாலமாக அனுமதிக்குத் தகுதிபெறுவோரின் தொகை அதிகரித்து வருவதாலேயே இப்புதிய நடைமுறை எடுக்கப்பட்டுள்ளதாம். (01)

## 'இளஞாயிறு' வெளிவந்தது

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சஞ்சிகையான ''இளஞாயிறு'' ஜூலை இதழ் வெளியிடப்பட்டுள்ளது. (18)

## ஆனையிறவால் உணவு லொறிகள்
## செல்வதற்கு அனுமதிக்கப்படுமாம்

வடபகுதிக்கு உணவு மற்றும் அத்தியாவசியப்பொருள்களை ஏற்றிச்செல்லும் லொறிகள் கண்டி வீதி வழியே ஆனையிறவு தடைமுகாமைத் தாண்டிச்செல்ல அனுமதிக்கப்படுமாம்.

இராணுவ அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்ததாகக் கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## அருட்திரு. ஹேபியர் நினைவாக
## மட்டு.பார் வீதியின்பெயர்மாற்றம்

மட்டக்களப்பில் முஸ்லிம் காடையர்களால் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் கொல்லப்பட்ட அருட்திரு.ஹேபியர் அடிகளாரின் நினைவாக மட்டு. பார் வீதிக்கு ஹேபியர் வீதி என பெயர் மாற்றப்படவுள்ளது.

இதே போன்று பஜார் வீதி மகாத்மா காந்தி வீதி எனப் பெயர் மாற்றப்படவுள்ளது. (16)

## காலரா வேகமாகப் பரவ
## கம்உதாவவே காரணமாம்

கொழும்பில் காலரா நோய் வேகமாகப் பரவியதற்கு கம்புறுப்பிட்டிய கம்உதாவக் கொண்டாட்டமே காரணம் என மாநகர எதிர்க்கட்சி உறுப்பினர் பௌஸி குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பு மாநகரசபையின் ஊழியர்கள் அதிகாரிகள், வாகனங்கள் கம்உதாவக் கொண்டாட்டத்திற்குப் பயன் படுத்தப்பட்டதனால் மாநகர சுத்திகரிப்பு பெருமளவில் பாதிக்கப்பட்டு குப்பைகள் பெருகி, துர்நாற்றம் வீசி காலரா போன்ற நோய்கள் வேகமாகப் பரவின என அவ் உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

## குயில்கூவ துயில்எழும் தம்பலகாமம்

தம்பலகாமத்தில் விடியலை அறிவிக்கும் பணியினை தற்போது சேவல்களுக்குப்பதில் குயில்களே செய்து வருகின்றனவாம்.

தமது பணியினை சேவல்கள் செய்யாது அவை அங்கு நிலை கொண்டுள்ள படையினரால் ஏப்பமிடப்பட்டு விட்ட பொழுதிலும் அந்தப் பணியினை அங்குள்ள குயில்கள் ஏற்று மிகவும் 'உஷாராக' கடமை செய்து வருகின்றனவாம்.

## அடுத்தவாரம் விநியோகிக்க
## கையிருப்பில் எதுவுமில்லை

யூலை மாதம் 8 ஆம் திகதிக்குப் பின் உணவுக்கப்பல்கள் எதுவும் முல்லைத்தீவுப்பகுதிக்கு வராமையினால், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உணவுபற்றாக்குறை நீடித்து வருவதாக முல்லைத்தீவு மாவட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த வாரம் விநியோகிப்பதற்கு எவ்வித உணவுப் பொருள்களும் அங்கு இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு வாரத்திற்கு 20 லொறி லோட் உணவுப் பொருள்கள் தேவையாக உள்ளன. (24)

## திருமலையில் அடிக்கடி திருட்டு
## தமிழரை குறிவைத்து நடக்கிறது

திருகோணமலை-கொழும்பு இரவு ரயிலில் அடிக்கடி திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாக பயணிகள் பலர் புகார் செய்துள்ளனர்.

கெக்கிராவைக்கும் கோட்டைக்கும் இடையேயுள்ள பகுதிகளிலேயே திருட்டுக்கள் இடம்பெறுவது வழக்கமாக உள்ளது.

குறிப்பாக தமிழ் பயணிகளைக் குறிவைத்தே இத் திருட்டுக்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (08)

□ □

## இவர்களும் பென்ஷன் பெறுவர்

அரசின் விவசாய ஓய்வூதியத்திட்டத்தில் இதுவரை ஒருலட்சத்து 15 ஆயிரம் பேர் அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளனர்.

கமத்தொழில் காப்புறுதிச் சபை மூலம் நடைமுறைப் படுத்தப்படும் இத்திட்டத்தில் மேலும் பல விவசாயிகளை இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## மருத்துவ பீட பீடாதிபதியாக
## பாலசுப்பிரமணியம் மீண்டும் தெரிவு

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதியாக பேராசிரியர் கே பாலசுப்பிரமணியம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட இவரது பதவிக்காலம் 1994 ஆகஸ்ட் 8ஆந் திகதி வரையானதாகும்.

மூன்று வருடத்திற்கொரு முறை மருத்துவபீடாதிபதி தெரிவு இடம்பெறும்

## மரணமடையும்ஊழியர் விவரங்களை
## இருவாரங்களுள் அனுப்பப் பணிப்பு

ஆசிரியர்கள், ஊழியர்கள் சேவைக் காலத்தில் மரணமடைந்தால் அவர்களது சுயவிவரக்கோவைகளையும், மரணப்பணிக்கொடை நட்டஈடு வழங்குவதற்கான ஆவணங்களையும் அவர்கள் இறந்த இருவாரங்களுக்குள் யாழ் கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் சகல கோட்டக் கல்வி அதிகாரிகளையும் பணித்துள்ளார்.

இவ்வாறு மரணமான ஆசிரியர்கள் பலரின் கொடுப்பனவுகளை வழங்க அவர்கள் இறந்து பல மாதங்களாகியும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்ன தமக்குப்புகார் வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 15

## சடலங்களை எடுத்துச்சென்ற பாஜ்
## திருமலைத் துறைமுகத்தில்

அண்மையில் விடுதலைப் புலிகளினால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட படையினரின் 29 சடலங்களையும் ஏற்றிச் சென்ற தட்டைப் படகு (பாஜ்) தற்போது திருமலை துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

கடற்படையினர் படையினரின் சடலங்களைக் கடற்படைக் கப்பலில் ஏற்க மறுத்துப் பின்னர் 'பாஜ்' இனை சடலங்களுடன் கட்டி இழுத்துச்சென்றமை தெரிந்ததே.

இந்த 'பாஜ்' பருத்தித்துறையின் இறங்குதுறையில் பொருள்களை ஏற்றி இறக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (24)

## முல்லையில் மூன்று பாஜ்கள்
## கடற்படையால் மூழ்கடிப்பு!

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கடற் பிரதேசத்தில் நிறுத்தப்பட்டிருந்த கப்பலில் இருந்த பொருள்களை இறக்குவதற்குப் பயன்படுத்தப்படும் மூன்று தட்டைப் படகுகளை (பாஜ்) கடற்படையினர் தாக்கி மூழ்கடித்துள்ளனர்.

கரையிலிருந்து சுமார் 150 மீற்றர் தூரத்தில் இந்த தட்டைப்படகுகள் கடலின் அடியில் அமிழ்ந்துள்ளன.

இத்தட்டைப் படகுகள் கப்பலிலிருந்து உணவை இறக்குவதற்காக திருகோணமலையில் இருந்து கொண்டு வரப்பட்டவையாகும். இதன் காரணமாக கப்பல்கள் முல்லைத்தீவுக்கு வந்தால் பொருள்களை இறக்குவதற்கு முடியாத நிலை ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

★ சனசமூக நிலையங்களின் கூட்டத்தில் மூர்த்தி

# மணலாறில் உள்ள முதியவர்கள் எல்லோரும் எம்முடன் சேர்ந்து ஆயுதம் ஏந்துகின்றனர்

"எமது போராட்டத்தில் பத்து வீதமானவர்களே இணைந்து போராடி வருகின்றனர். இது மிகவும் குறைந்த தொகையாகவே இருக்கின்றது.

இரண்டு லட்சம் மக்களுள்ள இப்பிரதேசத்தில் 50 ஆயிரம் இளைஞர்கள் சேர்ந்துகொண்டால் மூன்று மாதத்தில் நாம் தமிழீழத்தைப் பெற்றுவிடலாம். மணலாறில் உள்ள முதியவர்களெல்லாம் எம்மோடு இணைந்து ஆயுதம் ஏந்தி வருகின்றார்கள் இவர்கள் கடைக்குப் போகும் போதும் வயலுக்குப் போகும் போதும் ஆயுதத்துடனேயே போகின்றனர்.

இவர்கள் மாதிரிமா? மணலாறில் உள்ள ஆசிரியர்கள் கூட ஆயுதத்துடனேயே பாடசாலைக்குச் செல்கின்றனர்

இது போன்று சகல இடங்களிலும் நிகழுமானால் விரைவில் தமிழீழம் கிடைக்கும் என்பது நம்பிக்கை''

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற யாழ் மாவட்ட சனசமூகநிலையங்களின் தலைவர், செயலாளர்களுக்கான விசேட கூட்டத்தில் விடுதலைப் புலிகள் அரசியற் பொறுப்பாளர் திரு. மூர்த்தி கலந்துகொண்டு கருத்துரை வழங்கும்போது மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எம். டிவகலாலா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. மூர்த்தி தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

எமது மக்கள் எல்லோரும் தமிழீழம் கிடைக்க வேண்டும் - அது விரைவில் கிடைக்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள் ஆனால் தமது பிள்ளைகள் சேராமல், வீடு உடையாமல், மதில் விழாமல், பணம் செலவாகாமல் கிடைக்கவேண்டும் என்று நினைப்பதே தவறானது. இப்படியான சிந்தனையை விடுத்து சகலரும் போராட்டத்திற்குப் பங்களிக்க வேண்டும்.

இப்போராட்டத்தில் வீட்டுக்கு ஒருவர் சேர்ந்தால் இராணுவத்தை சுடத்தேவையில்லை நெரித்துக் கொன்று விடலாம். எனவே சகல மக்களும் பயத்தை விடுத்து போராட்டத்தில் சேர்ந்து கொள்ள முன்வாருங்கள்.

உலகத்திலேயே உள்ள நாடுகளில் தமிழனுக்கு என்று ஒரு படை இருக்கிறது என்றால் அது எமது படைதான். இந்தப் படையானது தமிழனின் வரலாற்றை - வீரச் செயல்களை உலகறியச் செய்து கொண்டிருக்கிறது.

ஏன்? இந்தியாவில் தமிழனுக்கென்று ஒரு வானொலி இருக்கின்றதா இல்லை எமக்கென்று ஒரு வானொலி இருப்பதை அறிவீர்கள்தானே.

இவற்றையெல்லாம் சனசமூக நிலையத்தினர் நன்றாக உணரவேண்டும். சனசமூக நிலையங்கள் சமூக பொருளாதார வாழ்வுக்கு வழிகாட்டுவனவாக மாத்திரம் இயங்கக்கூடாது.

அவை அரசியலுக்கும் வழி காட்ட வேண்டும். அரசியலும் மனிதவாழ்வுக்காகவே அமைக்கப்பட்டது என்பதை மக்கள் மத்தியில் பரப்பி மக்களை அரசியலில் ஈடுபடுத்த உதவ வேண்டும்.

எந்த ஒரு நாட்டுக்காரனும் எமக்கு விடுதலை பெற்றுத் தரமாட்டான் எமக்கான விடுதலையை நாமே போராடிப் பெற்றுக்கொள்ள வேண்டும். வேறு எந்த நாட்டிலும் இல்லாத சாதிக் கொடுமையானது எமது நாட்டிலேயே இருக்கின்றது. இதை ஒழிக்க சனசமூக நிலையங்கள் முன்வரவேண்டும்.

இதுவரை போராடி இறந்தவர்கள் தொகை நாலாயிரம் பேர். ஆனால் போராடப் பயந்து வீடுகளில் இருந்தவர்களில் இறந்தோர் தொகை முப்பத்தாறாயிரம் பேர் என்பதை அறிந்து கொண்டால் போதும்.

'போராட்டம் இங்கு நடைபெறும் போது பணத்தைச் சம்பாதிப்பதற்காக வெளிநாடுகளுக்கு ஓடுவது கேவலமானது. இந்தப் பிழையை நல்லதாகக் கொள்வது மிக மிகத் தவறானது இக்குறைபாடுகளை அகற்ற சனசமூக நிலையங்கள் உதவ வேண்டும்'' என்றார்.

யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு எஸ். பாலசிங்கமும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார். 18

## தடைசெய்த பொருள்களின் விவரம் வெளியிடப்பட்டன

வடக்குக் கிழக்கு பகுதிகளுக்கு கொண்டு செல்ல கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள பொருள்களின் பெயர் விவரப் பட்டியல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா அறிவித்துள்ளார்.

இந்தப்பட்டியலில் நாற்பத்தெட்டு பொருள்களின்பெயர்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## போதைவஸ்து கடத்தல் மட்டுநகர் இளைஞர் கைது

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து தமிழ் இளைஞர் ஒருவர் போதைவஸ்து கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்டார்.

இரண்டு கோடியே எண்பது லட்சம் ருபா பெறுமதியான ஹிரோயின் போதைப் பொருளை இவர் கடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சென்னையில் இருந்து வந்த இவர் விமானநிலையத்தை விட்டு காரில் செல்ல முயன்ற போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## எக்ஸ் கதிர் இயந்திரத்தை வடக்கே கொண்டுவர முயற்சி

கொழும்பில் உள்ள எக்ஸ் - கதிர் இயந்திரங்களை யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவருவதுபற்றி யாழ் அரசாங்க அதிபர் க.மாணிக்கவாசகர் சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடாத்திவருவதாகச் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் எக்ஸ் கதிர் இயந்திரங்களை தரைமார்க்கமாகக் கொண்டு வருவது பற்றி ஏற்கனவே கொழும்பில் பேச்சு நடாத்தியதும் தெரிந்ததே. 02

## வியாபாரிகள் வரவினால் பொருள்கள் விலை வீழ்ச்சி

வவுனியாவிலிருந்து நேற்றும் பல சயிக்கிள் வியாபாரிகள் வந்துள்ளதையடுத்து சில அத்தியாவசிய பொருள்களின் விலையில் வீழ்ச்சி காணப்பட்டது.

சீனி கிலோ 50 ருபாவாகவும், சன்லைட் சவர்க்காரம் 50 ருபாவாகவும் நேற்று யாழ் நகரப் பகுதியில் விற்கப்பட்டதைக் காணமுடிந்தது.

மேலும் பல பொருள்களின் விலை அடுத்த சில தினங்களில் வீழ்ச்சியடையலாம் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. 06

## இன்று கலந்துரையாடல்

இம் மாதம் முதல் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று பி. பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் வலி வடக்கு புனர்வாழ்வுக் கழகத்தினரால் நடாத்தப்படவுள்ளது.

இக் கலந்துரையாடல் சகல பொதுஸ்தாபன அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் பொது நலச்சேவையில் ஈடுபடுபவர்களையும் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

நிவாரணம் நிறுத்தப்பட்டதால் யாழ் மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளான ஒரு லட்சத்து எழுபத்தையாயிரம் குடும்பங்கள் நிலைபற்றிஇங்கு ஆராயப்படவுள்ளது.

## அதிபர்களுக்கான அவசர கூட்டம்

பாடசாலைகளின் உடனடித் தேவைகள் பற்றியும் அவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடுவதற்காக மருதனாமடம் யாழ்ப்பாண கல்விக்கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள் கொத்தணி அதிபர்களை 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு மருதனாமடக் கல்விக் கோட்ட அலுவலகத்திற்கும் பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாண கல்விக் கோட்ட அலுவலகத்திற்கும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் வேண்டியுள்ளனர்.

## அவசர அழைப்பு

இன்று 11ஆம் திகதி காலை 10.30 மணிக்கு வலிகாமத்தில் உள்ள விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க கொத்தணி ரீதியான தொடர்பாளர்கள், கிராமிய ரீதியான தொடர்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரையும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு தவறாது சமுகம் தரும்படி வலிகாமம் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## பயணக் கைதிகள் லெபனானில் விடுவிப்பு?

1986 இல் லெபனானில் புரட்சி நீதி அமைப்பு எனும் தீவிரவாதஇயக்கத்தால் கடத்தப்பட்டு பயணக்கைதிகளாக வைக்கப்பட்டிருக்கும் இரு அமெரிக்கர்களில் ஒருவர் அடுத்த 72 மணி நேரத்தில் விடுவிக்கப்படலாம் என நம்பப்படுகிறது.

பெய்ருட்டில் உள்ள ஒரு அமெரிக்கப் பணிமனைக்கு இது அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரை பொறுப்பேற்பதற்காக ஐ. நா. வின் சிறப்புத்தூதுவர். சிரியாவின் தலைநகர் டமஸ்கஸ் செல்லவுள்ளார்.

இதேவேளை மேற்கத்தைய நாட்டைச்சேர்ந்த இன்னோர் பயணக்கைதி விடுவிக்கப்பட்டால் கடத்திச்செல்லப்பட்ட பிரான்ஸ் பிரஜையான மனித உரிமைக்குழுவின் நிவாரணப் பணியாளரை தாம் கொலை செய்யப்போவதாக இனம் தெரியாத கடத்தல்காரர்கள் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (03)

## சவர்க்காரங்கள் கப்பலில் வரும்?

கடந்த ஒருவருடகாலமாக கொழும்பிலுள்ள சவர்க்காரத் தொழிற்சாலை நிறுவனம் வடபகுதிக்கு சவர்க்கார வகைகளை அனுப்பாததால் அந்நிறுவனத்துக்குபல லட்சம் ருபா நஷ்டமேற்பட்டுள்ளதாகத் கொழும்புச் செய்திகள் மூலம் தெரியவருகிறது.

இதனையடுத்து அந்த நிறுவனம் கப்பல் முலம் வடபகுதிக்கு சவர்க்காரங்களை அனுப்ப அரச உயர் மட்டத்தில் அனுமதி கோரியுள்ளதாகத் தெரியவருகிறது. 06

## பெற்றோரின் முன்மாதிரி

பெற்ற தாய் தமது மகளை விடுதலைப் போராட்டத்தில் இணைவதற்காக ஒப்படைத்த சம்பவம் பிரான்பற்றில்நிகழ்ந்துள்ளது.

பிரான்பற்று பகுதியைச் சேர்ந்த திருமதி நடேசபிள்ளை சின்னம்மா என்ற பெண்மணி தமது மகளான கணேஸ்வரியை நேற்று முன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பண்டத்தரிப்பு பிரதேச அலுவலகத்தில் ஒப்படைத்தார். 26,13

For Correct Dispensing of Doctor's Prescription
VISIT
ERIC GANESH OPTICIANS
566, Hospital Road, Jaffna.
Imported Frames, Lenses, Sunglasses and Photogray Day & Night Glasses are Available For Selection.
(This Establishment Provides Experienced Services of Former Employees of Eric Rajapakse & co.)
08046

### வடக்கே...

மின்சார உபகரணங்கள், உடுபிடவைகள் என்பனவற்றை ஒஞ்சமாகப் பெற்றதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

### இருபதாயிரம்...

அடங்குவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விசேட பயிற்சி முடிந்ததும் இவர்கள்வடபகுதிக்கு யுத்தத்திற்கு அனுப்பப்படுவார்கள் எனவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது.

### கேரதீவு...

வுள்ளன.

தடைப்பட்ட கொழும்புப் பயணத்தை இனி வழமை போல் பயணிகள் மேற்கொள்ள முடியும் எனவும் தெரியவருகிறது. 02

### யாழ்...

பேராசிரியர் பி. பாலசுந்தரம் பிள்ளை, பேராசிரியர் கே. சிவஞானசுந்தரம் ஆகியோரின் பெயர்கள் யாழ் பல்கலைக் கழக முதவையினால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 06

### 10ஆம் கட்ட ..

தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை யாழ் மாவட்டத்தில் சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 10ஆம் கட்ட உலர் உணவு நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்கி முடிக்கும் நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. 06

### வடபகுதி...

கற்கை நெறிக்கு 50பேரும், முகாமைத்துவத்தில் டிப்புளோமா 100பேருக்கும், மனையியலும், வட்டவியலில் 100பேருக்கும், உணவுத் தொழில் நுட்பம் 100பேருக்கும், ஆய்வுகூட தொழில் நுட்பத்தில் 100பேருமாக 450 பேருக்கு பயிற்சிக் கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது (01)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 11.08.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.